# கொங்கு மண்டலம் பாசனம் பெற வழிவகுத்த காலிங்கராயனுக்கு சிலை

## முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

**சென்னை, செப். 19:** கொங்கு மண்டலம் பாசனம் பெற வழிவகுத்த காலிங்கராயனுக்கு சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். மேலும், அவரது பெயரிலுள்ள அணைக்கட்டுப் பகுதி சுற்றுலாத் தலமாகவும் மாற்றப்படும் என அவர் அறிவித்தார்.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:


விவசாயத்துக்கு இன்றியமையாததாக விளங்கும் நீர் கிடைக்கப் பெறும் வகையில் அணைக் கட்டுகளை உருவாக்கிய பெரியோர் நினைவைப் போற்றும் வகையில் மணி மண்டபங்களை எனது தலைமையிலான அரசு அமைத்து வருகிறது. அந்த வகையில், முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னல் பென்னிகுவிக்கின் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டிய கரிகால் பெருவளத்தானுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.



ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகள் பாசனம் பெற நற்பணி ஆற்றியவர் காலிங்கராயன். ஈரோடு மாவட்டத்தின் அணிகலனாகத் திகழ்வது அவரது பெயரிலுள்ள கால்வாய். இந்த காலிங்கராயன் கால்வாயை கட்டிய பெருமை லிங்கையன் என்ற காலிங்கராயனைச் சாரும். அவர் பாண்டிய நாட்டு தலைவரான பிறகு தனது ஆளுகைக்கு உள்பட்ட புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற வேண்டும் எனத் திட்டமிட்டு நாட்டு மக்களின் உதவியுடன் காலிங்கராயன் அணையைக் கட்டி, கால்வாயையும் வெட்டினார்.

**15,743 ஏக்கர் நிலங்கள் பாசனம்:** காவிரி ஆற்றின் கிளை நதிகளான பவானியையும், நொய்யலையும் இணைக்கும் கால்வாய் காலிங்கராயன் கால்வாய். இதன் மூலம் பவானி ஆற்றிலிருந்து நீர் பிரித்தெடுக்கப்பட்டு, காவிரி ஆற்றின் ஓரமாகவே அதன் தென் கரையில் சுமார் 56 மைல்கள் கிழக்காக ஓடி ஆவுடையார் பாறை என்ற இடத்தில் நொய்யல் ஆற்றில் சங்கமமாகிறது.

பவானி ஆற்றை நொய்யல் ஆற்றுடன் இணைக்க 32 மைல் தூரம் கால்வாய் வெட்டினால் போதும் என்ற நிலை இருந்தபோதும், அதிகமான நிலங்கள் பாசனம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும், நீர் தேங்கி நின்று வயலுக்குப் பாய வேண்டும் என்ற எண்ணத்துடனும் 56 மைல் தூரத்துக்கு இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.



கால்வாயின் இரு கரைகளும் காரையால் கட்டப்பட்டு இருப்பதால் காரை வாய்க்கால் என்றும், பாம்பு போல் நெளிந்து செல்வதால் கோண வாய்க்கால் என்றும் இதனை அந்தப் பகுதி மக்கள் அழைக்கின்றனர். இதன் மூலம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 15 ஆயிரத்து 743 ஏக்கர் நிலம் இப்போது பாசன வசதி பெற்று வருகிறது.

இப்படிப்பட்ட வலுவான அணையினையும், கால்வாயையும் கட்டிக் கொடுத்தவரும், நதிகள் இணைப்பில் முன்னோடியாக விளங்கியவரும், மக்களுக்கு பல அறப்பணிகளை செய்வதருமான காலிங்கராயனுக்கு சிலை அமைக்க வேண்டும் எனவும், காலிங்கராயன் அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதை ஏற்று, ஈரோடு மாவட்டம் நாசுவம்பாளையம் பகுதியில் காலிங்கராயனுக்கு சிலை அமைக்கப்படும்; அவரது பெயரிலான அணைக்கட்டுப் பகுதி சுற்றுலாத் தலமாக அமைக்கப்படும் என்றும் முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.